Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 236 | உள்ளூர் - 24.08.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 236 | வெளியூர் - 25.08.2026 | செவ்வாய்க்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

நிம்மதியான இரவு உறக்கம் பெற 'ஜோதிட பரிகாரங்கள்'!
பொறியாளர்களுக்கு 147 காலியிடங்கள்...!
இடமாற்றம் மறுத்தால் சம்பளம் கட்! அரசு அதிரடி!
150 உணவு நிறுவனங்களுக்கு FSSAI அதிரடி நோட்டீஸ்!!

## முதல்வர் விஜய் எடுத்த அதிரடிகள்...!

# பரந்தூர் விமான நிலையம் ரத்து! புதிய இடம் விரைவில்..!

## 3 சிலிண்டர்கள் இலவசம்– மகளிர் வெற்றி பயணம் விரிவாக்கம்!!




சென்னை, ஆக. 24–

பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் அறிவித்தார். மேலும், ஆண்டுக்கு 3 சிலிண்டர் இலவசமாக வழங்கப்படும் என்ற அறிவிப்பையும் அவர் வெளியிட்டார். தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடைபெற்றது வருகிறது. வார இறுதி விடுமுறைக்கு பின்னர் இன்று (ஆக.24 – திங்கட்கிழமை) கூடிய அவையின் தொடக்க நிகழ்வாக, கடந்த வாரம் காலமான பழம்பெரும் நடிகை சவுகார் ஜானகிக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் முக்கிய அறிவிப்புகளை முதல்வர் விஜய் வெளியிட்டார்.

**3 சிலிண்டர்கள் இலவசம்**

"கடந்த 4 மாதங்களாக வளைகுடாவில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், எரிவாயு சிலிண்டர் விலை உயர்ந்துள்ளது. இதனால் மக்களின் செலவு கூடியுள்ளது. அதைக் கருத்தில் கொண்டு மக்களின் நிதிச்சுமையை குறைக்கும் வகையிலும், மக்கள் நலனை பாதுக்காகவும், மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் நோக்கிலும், எரிவாயு சிலிண்டருக்கான செலவழிக்கப்படும் தொகையினை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

எனவே, குடும்பத் தலைவிகள் பயன்பெறும் வகையில் அன்னபூரணி சூப்பர் சிக்ஸ் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஆண்டுக்கு மூன்று சிலிண்டர்கள் விலையின்றி வழங்கப்படும். இந்தத் திட்டம் பொங்கல் திருநாள் முதல் செயல்பாட்டுக்கு வரும். எரிவாயு சிலிண்டருக்கு விலை பயனா ளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். இந்த திட்டம் மூலம் 1.30 கோடி குடும்பங்கள் பயனடைவார்கள்" என்று முதல்வர் விஜய் தெரிவித்தார்.

**பரந்தூர் விமான நிலைய திட்டம்**

"ஏகனாபுரம் மற்றும் அதையொட்டி அமைந்துள்ள கிராம மக்களின் போராட்டத்தை அறிந்து கடந்த 20.01.2025–ல் அங்கு சென்று மக்களின் குறைகளை கேட்டறிந்தேன். அப்போது சில அறிவிப்புகளை நான் வெளியிட்டேன். அது பின்வருமாறு: சென்னை பரந்தூர் மற்றும் அதை சுற்றியுள்ள 12 கிராமங்களில் அமைய உள்ள விமான நிலையத்தை எதிர்த்து போராடும் மக்களுடன் நான் உறுதியாக நிற்கிறேன். நீண்ட நாட்களாக இந்த திட்டத்துக்கு எதிராக போராடி வரும் விவசாயிகளுக்கு ஆதரவாக தெரிவித்துக் கொள்கிறேன்.

விக்கிரவாண்டியில் அக்டோபர் 2024–ல் நடைபெற்ற மாநாட்டில் பரந்தூர் விமான நிலைய திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தேன். தொழில் வளர்ச்சி மற்றும் அதற்கான விமான நிலையங்களின் பங்கு குறித்து நான் நன்கு அறிவேன். அதற்கான எனது முழு ஆதரவு உண்டு. ஆனால், பரந்தூரில் இந்த விமான நிலைய திட்டம் அமைய கூடாது.

அது குறித்து அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அறிவித்தேன். குறைவான விவாசாய நிலையங்கள் பாதிக்கப்படும் வகையில், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் மாற்று இடத்தை தேர்வு செய்ய வேண்டுமென தெரிவித்திருந்தேன்.

மக்களிடம் அன்று அறிவித்ததை நிறைவேற்றும் பொருட்டு, புதிய விமான நிலையம் அமைப்பது குறித்து உயர் அதிகாரிகள் மற்றும் துறை சார்ந்த வல்லுனர்களிடமும் விரிவாக ஆலோசனை நடத்தினேன். ஏற்கெனவே நான் உறுதி அளித்தவாறு பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்த அரசால் கைவிடப்படும்" என்று முதல்வர் விஜய் அறிவித்தார்.

**மாற்று இடம் தேர்வு செய்யப்படும்**

துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்கள் உடன் கலந்துரையாடி விவசாய நிலம் மற்றும் குடியிருப்புகளுக்கு பெரிய பாதிப்பு ஏற்படாத வகையில் புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பொருத்தமான சில மாற்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அந்த இடங்களில் தொழில்நுட்ப ரீதியான சாத்தியக்கூறுகளை சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு புதிய விமான நிலையத்துக்கான இடம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்தார்.

**மீனம்பாக்கம்**
**விமான நிலையம் விரிவாக்கம்**

சென்னை – மீனம்பாக்கம் விமான நிலையத்தை மேலும் விரிவாக்கம் செய்து, அதன் வடமேற்கு பகுதியில் ஆண்டுக்கு கூடுதலாக 20 மில்லியன் பயணிகளை கையாளும் திறன் கொண்ட 'டர்மினல் 5' ஐந்தாவது பயணிகள் முனையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோல தற்போது நடைபெறும் 'டர்மினல் 3' கட்டுமான பணிகள் முடிவுற்ற பின் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஆண்டுக்கு 35 மில்லியன் பயணிகளை கையாளும் வகையில் இருக்கும். டர்மினல் 5 பணிகள் நிறைவடைந்து, அது செயலாக்கத்துக்கு வந்த பிறகு ஆண்டுக்கு மொத்தம் 55 மில்லியன் பயணிகளை கையாளக்கூடியதாக இருக்கும். இதன் மூலம் சென்னை விமான நிலையம் மேம்படுத்த படுவதோடு, பயணிகளின் போக்குவரத்து தேவை புதிய விமான நிலையம் அமை க்கப்படும் வரை உறுதி செய்யப்படும் என்று முதல்வர் விஜய் அறிவித்தார்.

**மகளிர் வெற்றி பயணம் விரிவாக்கம்**

இதேபோல் * வெற்றிப் பயணம் மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டம் விரிவாக்கம் செய்யப்படும். முதற்க ட்டமாக மாநகரம், நகரப் பகுதிகளில் இயங்கும் Express, LSS, டீலக்ஸ் (Deluxe) அரசுப் பேருந்துகளிலும், மகளிர் கட்டணமில்லா பயணங்கள் மேற்கொள்ளலாம்.

* மாவட்டங்களுக்கிடையே பயணம் மேற்கொள்ள ஏதுவாக புறநகர் மற்றும் மலைப் பகுதிகளில், சாதாரணக் கட்டண பேருந்துகளிலும், மகளிர் கட்டணமில்லா பயணங்கள் மேற்கொ ள்ளலாம். தேசத்தந்தை காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2ம் தேதி முதல் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தை செயல்ப டுத்துவதன் மூலம் ஆண்டுதோரும் 6000 கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். வருமான உச்சவரம்போ மற்றும் மேற்கொள்ளவிரும்பும்பயண எண்ணிக்கையிலோ கட்டுப்பாடுகள் இல்லை. இத்திட்டத்தின் கீழ் திருநரும் கட்டணமில்லா பயணங்கள் மேற்கொ ள்ளலாம். இவ்வாறு முதல்வர் விஜய் பேசினார்.

## இந்தியா உலகின் கப்பல் கட்டுமான மையமாக உருவாகும்: மத்திய மந்திரி ராஜ்நாத் சிங்!

கொல்கத்தா, ஆக. 24–

மேற்கு வங்காளத்தில் சுமார் ரூ.3,500 கோடி மதிப்பிலான 5 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் விழா நேற்று நடந்தது. மத்திய ராணுவ மந்திரி ராஜ்நாத் சிங் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்.



கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்ட் என்ஜினீயர்ஸ் (ஜி.ஆர். எஸ்.இ.) கப்பல் கட்டும் தளம். மற்றும் யந்திரா இந்தியா நிறுவனத்தின் 5 விரிவாக்கத் திட்டங்கள் இதில் அடங்கும். அடிக்கல் நாட்டிய பின்னர் ராஜ்நாத் சிங் பேசும்போது கூறியதாவது:–

கப்பல் கட்டுமான தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது. அதற்கேற்ப புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளும் திறன் இந்தியாவுக்கு உள்ளது. பாரம்பரியமாக கப்பல் கட்டுமானத்தில் முன்னணியில் உள்ள நாடுகள் உற்பத்தியைக் குறைத்து வருகின்றன.

நாட்டில் அதிகளவிலான தொழிலாளர்கள், உருக்கு நிறுவனங்கள் மற்றும் புதிய தொழில் நுட்பங்களை ஏற்றுக்கொள்ளும் திறன் இருப்பதால் இந்தியா இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள முடியும். இதன் மூலம் இந்தியா உலகின் கப்பல் கட்டுமான மையமாக மாற முடியும். இவ்வாறு அவர் பேசினார்.


ஜி.ஆர்.எஸ்.இ. நிறுவனம் ஹூக்ளி ஆற்றின் இருபுறங்களிலும் 2 சிறிய கப்பல் கட்டும் தளங்களையும், ராய்சாக்கில் 32 ஏக்கர் பரப்பிலான இடத்தையும் குத்தகைக்கு எடுத்துள்ளது. இதில் ரூ.2,500 கோடிக்கு மேல் முதலீடு செய்து கப்பல் கட்டுமான மையம் அமைக்கப்பட உள்ளது.

இதேபோல யந்திரா இந்தியாவின் இஷாபூரில் ரூ.750 கோடிக்கு மேல் முதலீட்டில் 2 புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட உள்ளன. இந்தத் திட்டங்கள் வேலைவாய்ப்பையும், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான வாய்ப்புகளையும் அதிகரிக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஈரானின் சைபர் தாக்குதல்! பிரிட்டனுக்குப் பிறகு அமெரிக்காவுக்கும் குறியா?

ஈரான், ஆக. 24–

ஈரானுடன் தொடர்புடைய ஹேக்கர்கள் பிரிட்டனில் உள்ள சிறிய மின் உற்பத்தி நிலையத்தை சைபர் தாக்குதல் மூலம் 4 நாட்கள் முடக்கியதாக தகவல் வெளியாகியுள்ளது. ஜூலை மாதம் நடந்த இந்த தாக்குதலை பிரிட்டன் அதிகாரிகள் தற்போது உறுதிப்படுத்தியுள்ளனர். எனினும், மின் உற்பத்தி அல்லது விநியோகத்தில் பெரிய பாதிப்பு ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்த தாக்குதல் தொடர்பான இடம், பாதிக்கப்பட்ட இணையதளம் உள்ளிட்ட முழு விவரங்களை பிரிட்டனின் National Cyber Security Centre (NCSC) வெளியிடவில்லை.

இதற்கிடையில், அமெரிக்காவின் 12 மாநிலங்களில் குடிநீர் கட்டமைப்புகள் மீது ஜூலை மாதம் சைபர் தாக்குதல்கள்நடந்ததாக FBI உள்ளிட்ட அமைப்புகள் தெரிவித்துள்ளன. ஆனால் இதை ஈரான் ஆதரவு ஹேக்கர்கள் நடத்தியதாக அமெரிக்கா உறுதி செய்யவில்லை.

பிரிட்டன், ஈரானுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு தனது ராணுவ தளங்களை பயன்படுத்த அனுமதித்த பின்னர் இந்த சைபர் தாக்குதல் நடந்தது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 24.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 07-ம் தேதி

# அடுத்த 2 தலைமுறைக்கும் பணம் சேர்க்கலாம்..!



மாதச் சம்பளம்... குடும்பச் செலவு... கடன்... எதிர்காலப் பொறுப்பு...

இவற்றுக்கு நடுவில், “நம்முடைய அடுத்த தலைமுறையாவது பொருளாதார ரீதியாக நிம்மதியாக வாழ வேண்டும்” என்பது ஒவ்வொரு குடும்பத் தலைவரின் கனவு.

குறிப்பாக நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மிகப்பெரிய சவால், வருமானத்தை மட்டும் நம்பாமல், அந்த வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை தொடர்ந்து முதலீடு செய்து செல்வத்தை உருவாக்குவது.

அந்த வகையில், நீண்டகால முதலீட்டில் SIP மற்றும் Step–up SIP போன்ற முறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

**முதலில் அவசர நிதி... அடுத்தது முதலீடு!**

முதலீடு செய்யும் முன் குடும்பத்தின் அத்தியாவசிய செலவுகளுக்கான அவசரகால நிதியை உருவாக்குவது மிகவும் அவசியம். அதன்பிறகு, ஒவ்வொரு மாதமும் சம்பளத்தில் இருந்து செலவுகள் போக மீதமுள்ள தொகையில் ஒரு பகுதியை திட்டமிட்டு முதலீடு செய்யலாம்.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடு என்பது குறுகிய காலத்தில் பணக்காரராகும் வழி அல்ல. நீண்டகால அணுகுமுறையுடன், சந்தை ஏற்ற இறக்கங்களை ஏற்றுக்கொண்டு முதலீடு செய்வதே முக்கியம்.

**ரூ.30,000 SIP... ரூ.5 கோடி இலக்கு?**

ஒரு கணக்கீட்டின் அடிப்படையில், மாதம் ரூ.30,000 வீதம் SIP முதலீடு செய்து, ஆண்டுக்கு சராசரியாக 12% வருமானம்கிடைக்கும் எனக் கருதினால், சுமார் 24 ஆண்டுகளில் ரூ.5 கோடியை எட்டும் வாய்ப்பு இருக்கலாம்.

ஆனால் இதைவிட வேகமாக இலக்கை அடைய உதவும் மற்றொரு உத்தி உள்ளது.

**“STEP–UP SIP” — ஆண்டுதோறும் முதலீட்டை உயர்த்துங்கள்!**

ஒவ்வொரு ஆண்டும் SIP தொகையை 5% அதிகரித்து வந்தால், ரூ.5 கோடி இலக்கை அடையும் காலம் சுமார் 21 ஆண்டுகள் 5 மாதங்களாக குறையக்கூடும்.

அதேபோல், ஆண்டுதோறும் SIP தொகையை 10% அதிகரித்து வந்தால், சுமார் 18 ஆண்டுகள் 11 மாதங்களில் அந்த இலக்கை எட்டும் வாய்ப்பு இருப்பதாக கணக்கீடுகள் தெரிவிக்கின்றன.

**ஆனால்... ஒரு முக்கிய எச்சரிக்கை!**

12%, 14% அல்லது 16% வருமானம் என்பது உத்தரவாதமான வருமானம் அல்ல. மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயத்திற்கு உட்பட்டவை. கடந்த கால வருமானம் எதிர்காலத்திலும் அதேபோல் கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

எனவே, “அதிக வருமானம் கிடைக்கும்” என்ற ஆசையை விட, “நீண்ட காலம் தொடர்ந்து முதலீடு செய்வோம்” என்ற ஒழுக்கமே செல்வத்தை உருவாக்கும் முக்கிய சக்தி.

**ஒரே நாளில் கோடீஸ்வரர் ஆக முடியாது...**

ஆனால், இன்று தொடங்கும் சிறிய முதலீடு நாளைய தலைமுறைக்கு பெரிய செல்வமாக மாறலாம்!

வருமானம் அதிகரிக்கும் போதெல்லாம் முதலீட்டையும் அதிகரிப்பது — அதுவே நீண்டகால செல்வ உருவாக்கத்தின் முக்கிய ரகசியம்.



“புதிய தலைமுறை” ‘16’–ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது..! இளமையில் ‘16... புதுமையில் 16’... என்றும் ‘16’... வாழ்க! ‘பதினாறு...!

**முனைவர் வைகைச்செல்வன் முன்னாள் அமைச்சர்**



பழனி அருகே பாலசமுத்திரம் வரதராஜ பெருமாள் கோவிலில் ஆவணி மாத பிரம்மோற்சவ விழா கொடியேற்றத்துடன் நேற்று தொடங்கியது. இதில் கோயில் நிர்வாக அதிகாரி பொறுப்பு வெங்கடேசன், பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, அரிமா பிரமுகர் சுந்தரம், கோவில் கண்காணிப்பாளர் அழகர்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்திய ராணுவத்தில் இலவச சைபர் பயிற்சி: லட்சம் பரிசுகளை வெல்ல செம வாய்ப்பு: யார் விண்ணப்பிக்கலாம்?

புதுடெல்லி, ஆக. 24–

இந்திய ராணுவத்தின் ‘டெரிடோரியல் ஆர்மி’ (Territorial Army) மற்றும் ‘சைபர்பீஸ்’ (CyberPeace) அமைப்பு இணைந்து ‘டெரியர் சைபர் குவெஸ்ட் 2026’ (Terrier Cyber Quest – TCQ) என்ற தேசிய அளவிலான சைபர் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பப் போட்டியை அறிவித்துள்ளன. நாட்டின் டிஜிட்டல் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் சைபர் விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் திறமைசாலிகளைக் கண்டறிய இந்த போட்டி நடத்தப்படுகிறது.




**யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?**

மாணவர்கள், சைபர் பாதுகாப்பு வல்லுநர்கள், செயற்கை நுண்ணறிவு (AI) ஆராய்ச்சியாளர்கள், எத்திக்கல் ஹேக்கர்கள் (Ethical Hackers), சாஃப்ட்வேர் கிரியேட்டர்ஸ், கண்டெண்ட் கிரியேட்டர்ஸ் (Content Creators), ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ள யார் வேண்டுமானாலும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

விருப்பமுள்ளவர்கள் cyberchallenge.in/tcq2026 என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஆகஸ்ட் 31, 2026–க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

**போட்டிப் பிரிவுகள்:**

பக் ஹண்டிங் (Bug Hunting):

இதில் ஆன்லைன் மூலமாக சிடிஎஃப் (Capture–the–Flag) சவால் நடத்தப்படும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகளில் உள்ள தொழில்நுட்பக் கோளாறுகள் மற்றும் குறைபாடுகளைக் கண்டறிந்து ஆவணப்படுத்த வேண்டும். அதிகபட்சம் 3 பேரடங்கிய குழுவாகப் பங்கேற்கலாம்.

**ஏஐ கவச் (AI Kavach):**

சைபர் அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து தடுக்கும் வகையிலான ஏஐ சாத்தியக்கூறுகளை உருவாக்க வேண்டும். விண்ணப்பிக்கும் போது 5 பக்க விளக்கக்காட்சியை (Presentation) சமர்ப்பிக்க வேண்டும். 3 நபர்கள் வரை குழுவில் இடம்பெறலாம்.

**நேஷனல் கிரியேட்டர்ஸ் சேலஞ்ச் (National Creators Challenge):**

இணையவழி மோசடிகள், டீப்ஃபேக் (Deepfake) தொழில்நுட்பத்தின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் 1 முதல் 3 நிமிடங்கள் கொண்ட வீடியோக்கள் அல்லது ரீல்ஸ்களை உருவாக்க வேண்டும். இதில் 4 நபர்கள் வரை ஒரு குழுவில் பங்கேற்கலாம்.

**போட்டி நடைபெறும் தேதிகள்:**

இந்த ப் போட்டிகளுக்கான ஆன்லைன் தேர்வு செப்டம்பர் 1 முதல் செப்டம்பர் 10 வரை நடைபெறும். அதில் தேர்வாகும் சிறந்த குழுக்கள், அக்டோபர் 6 முதல் அக்டோபர் 8 வரை புதுடெல்லியில் நடைபெறும் 36 மணிநேர கிராண்ட் ஃபினாலே போட்டியில் பங்கேற்பார்கள். வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு விழா அக்டோபர் 9 அன்று நடைபெறும்.

வெற்றியாளர்களுக்கான பரிசுகள்:

இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும் பங்கேற்பாளர்களுக்கு டெரிடோரியல் ஆர்மி வழங்கும் சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும். மேலும், ராணுவத்தின் உயர் அதிகாரிகளைச் சந்திக்கும் வாய்ப்பு, பாதுகாப்புத்துறை மையங்களைப் பார்வையிடும் அரிய வாய்ப்பு மற்றும் ராணுவத்தின் எதிர்கால சைபர் பாதுகாப்பு திட்டங்களில் பங்காற்றும் வாய்ப்பும் வெற்றியாளர்களுக்குக் கிடைக்கும்.

# அமெரிக்க பயணத்துக்கு ரேவந்த் ரெட்டிக்கு மத்திய அரசு ‘நோ’!

தெலுங்கானா, ஆக. 24–

தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டியின் திட்டமிடப்பட்ட அமெரிக்கப் பயணத்திற்கு மத்திய அரசு அரசியல் அனுமதி மறுத்துள்ளது. முதலீடுகளை ஈர்ப்பது, கல்வி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்வது உள்ளிட்டவை பயணத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்தன.




ஆனால், அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ் மற்றும் நியூயார்க் மேயர் ஜோரன் மம்தானியை சந்திக்க திட்டமிடப்பட்டிருந்தது, பயணத்தின் அதிகாரப்பூர்வ நோக்கத்துடன் பொருந்தவில்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதனால் அனுமதி மறுக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது. ஹார்வர்டு, MIT உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் நிகழ்ச்சி களும் திட்டமிடப்பட்டிருந்தன. இங்கிலாந்து பயணத்திற்கு மட்டும் மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த விவகாரம் தெலங்கானா அரசியல் வட்டாரத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# காலிஃபிளவரில் புழுக்கள்! திருமலை உணவகங்களில் திடீர் தடை!

திருப்பதி, ஆக. 24–

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு வரும் லட்சக்கணக்கான பக்தர்களின் உணவுப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, திருமலையில் உள்ள அனைத்து உணவகங்களிலும் காலிஃபிளவர் உணவுகளுக்கு தற்காலிகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.




உணவகங்களுக்கு கொண்டுவரப்பட்ட காலிஃபிளவர்களில் புழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கோபி மஞ்சூரியன், கோபி ரைஸ் உள்ளிட்ட உணவுகளை விற்பனை செய்ய தேவஸ்தானம் உத்தரவிட்டுள்ளது.

இது நிரந்தரத் தடை அல்ல. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என தேவஸ்தானம் தெரிவித்துள்ளது. உணவக உரிமையாளர்களுடன் சிறப்புக் கூட்டம் நடத்தி, சுகாதார விதிகளை கடுமையாகப் பின்பற்றவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே திருமலையில் சைனீஸ் துரித உணவுகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த ஜூன் மாதம் FSSAI–யுடன் இணைந்து 325 உணவகங்களைச் சேர்ந்த 1,300 சமையலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உணவுப் பாதுகாப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. மேலும், பக்தர்களுக்கான அன்னப்பிரசாதத்தில் பயன்படுத்தப்படும் காய்கறி களின் தரம், கொள்முதல் மற்றும் சேமிப்பையும் தேவஸ்தான அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# இடமாற்றம் மறுத்தால் சம்பளம் கட்! அரசு அதிரடி!!

சென்னை, ஆக. 24–

பணியிடமாற்றம் செய்யப்பட்ட நீர்வளத்துறை அலுவலர்கள், புதிய பணியிடத்தில் சேராமல் விடுப்பில் சென்றால் ஊதியம் நிறுத்தப்படும் என அரசு முடிவு செய்துள்ளது.

சென்னை, கோவை, மதுரை, திருச்சி என 4 மண்டலங்களைக் கொண்ட நீர்வளத்துறையில், நீண்டகாலமாக ஒரே இடத்தில் பணியாற்றிய அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால் சிலர் புதிய இடத்தில் சேராமல், அரசியல் முக்கியப் புள்ளிகள் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்களை சந்தித்து, அதிக நிதி ஒதுக்கப்பட்ட பணியிடங்களைத் தக்க வைக்க முயல்வதாக கூறப்படுகிறது.




இதுபோன்ற நடைமுறைகளைத் தடுக்க புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 5 செயற்பொறியாளர்கள் புதிய பணியிடத்தில் சேராமல் விடுப்பில் இருப்பது தொடர்பாக அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

பணியில் சேர வேண்டிய காலம் முடிந்தும் வேண்டுமென்றே வராமல் இருப்பது முறைகேடு என்பதால், பணிக்கு வராத பொறியாளர்களின் ஊதியத்தை நிறுத்த அரசு முடிவு செய்துள்ளது.

# 150 உணவு நிறுவனங்களுக்கு FSSAI அதிரடி நோட்டீஸ்!!

சென்னை, ஆக. 24–

உணவு விளம்பரங்கள், தயாரிப்பு லேபிள்கள் மற்றும் விதிமுறை இணக்கத்தை ஆய்வு செய்த FSSAI, சமீபத்திய ஆய்வுகளின் அடிப்படையில் 150–க்கும் மேற்பட்ட உணவு நிறுவனங்களுக்கு நோட்டீஸ் வழங்கியுள்ளது.

தவறான அல்லது வழிதவறச் செய்யும் விளம்பரங்கள், உண்மைக்கு மாறான தயாரிப்பு விளக்கங்கள், லேபிளிங் விதிமீறல்கள் உள்ளிட்டவை நடவடிக்கைக்குக் காரணமாக கூறப்பட்டுள்ளது.




முன்னணி நிறுவனங்களும் சிக்கின:

Nestle India, PepsiCo, Abbott India, Red Bull India, Danone India, Monster Energy India, Mondelez India, Coca–Cola India, Diageo, Pernod Ricard, Ferrero India, Kenvue உள்ளிட்ட நிறுவனங்கள் இதில் அடங்கும். ஆற்றல் பானங்கள் மற்றும் மதுபானப் பிரிவுகளும் கண்காணிக்கப்பட்டுள்ளன.

Amazon, Flipkart–க்கும் நோட்டீஸ்:

உணவு விற்பனை செய்யும் இ–காமர்ஸ் நிறுவனங்களான Amazon, Flipkart உள்ளிட்டவற்றுக்கு 12 நோட்டீஸ்கள்வழங்கப்பட்டுள்ளன. Amazon–ன் ஒரு கிடங்கு உரிமமும் ரத்து செய்யப்பட்டதாக FSSAI தெரிவித்துள்ளது.

KFC, McDonald’s உள்ளிட்ட உணவகங்களும் சிக்கின

KFC, McDonald’s, Pizza Hut, Domino’s, Costa Coffee உள்ளிட்ட நிறுவனங்களுக்கு 30–க்கும் மேற்பட்ட நோட்டீஸ்கள்வழங்கப்பட்டுள்ளன. Domino’s தொடர்புடைய 5 உரிமங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

உணவுப் பொருட்களின் பாதுகாப்பு மட்டுமின்றி, விளம்பரங்களில் கூறப்படும் தகவல்கள் மற்றும் பேக்கேஜிங் லேபிள்களும் விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும் என FSSAI வலியுறுத்தியுள்ளது.



# நிம்மதியான இரவு உறக்கம் பெற உதவும் ‘ஜோதிட பரிகாரங்கள்’!




வேத ஜோதிட நிபுணர்கள் கருத்துப்படி, நம் உறக்கத்திற்கும் – கிரகங்களின் ஆற்றல் சமநிலைக்கும் நெருக்கமான தொடர்பு காணப்படுகிறது. கிரகங்களின் சமைநிலையின்மை, நம் இரவு உறக்கத்தையும்; உடல் ஆரோக்கியத்தையும் பாதிக்கும். எதிர்மறை ஆற்றலை கொண்டு வரும், மனதளவிலும் நம்மை பாதிக்கும். கிரகங்களின் ஆற்றல் சமநிலையை உறுதி செய்து, முழுமையான இரவு உறக்கத்தை உறுதி செய்ய, எளிய ஜோதிட பரிகாரங்கள் சில உதவி செய்யும் எனவும் நிபுணர்கள் கருதுகின்றனர்.

**காரணம் 1 – சந்திரன் பலவீனம்!**

ஜோதிட நிபுணர்கள் கூற்றுப்படி நம் இரவு உறக்கத்தை பாதிக்கும் ஒரு விஷயமாக சந்திரன் ஆற்றல் சமநிலையின்மை பார்க்கப்படுகிறது. அதாவது, உங்கள் ஜாதகத்தில் சந்திரன் பலவீனமான நிலையில் இருக்க, இரவு உறக்கம் பெறுவதில் சிரமங்கள் அதிகரிக்கும். உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளை ஆளும் சந்திரனின் பலவீனமான நிலை, முழுமையான இரவு உறக்கத்தை பெற விடாமல் தடுக்கும். உங்கள் ஜாதகத்தில் சந்திரனை பலப்படுத்துவதன் மூலம், நிம்மதியான இரவு உறக்கத்தை நீங்கள் பெறலாம்.

சந்திர பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ‘ஓம் சோம் சோமாய நமஹ’ எனும் மந்திரத்தை தினமும் காலை உச்சரிக்க சந்திரனின் ஆற்றலை மேம்படுத்தலாம் – நிம்மதியான இரவு உறக்கம் பெறலாம்.

இரவு உறங்க செல்வதற்கு முன், வெதுவெதுப்பான நீரில் குளித்து, பின் ‘ஓம் சந்திராய நமஹ’ எனும் மந்திரத்தை 108 முறை உச்சரியுங்கள்.

**காரணம் 2 – ராகு, சனி விளைவுகள்!**

நிழல் கிரகமாக ராகுவின் எதிர்மறையான விளைவுகள் பதற்றத்தை அதிகரிக்கும், எதிர்காலம் தொடர்பான சிந்தனைகளை அதிகரிக்கும். அச்சத்தின் காரணமாக உங்கள் மன அமைதியை சிதைக்கும், நிம்மதியான இரவு உறக்கம் கிடைக்க விடாமல் உங்களை வாட்டி வதைக்கும். அதேப்போன்று, உங்கள் கர்ம பலன்களை அளிக்கும் சனி பகவான், நிம்மதியான இரவு உறக்கம் பெறுவதன் வாய்ப்புகளை தடுப்பார். பின் வரும் பரிகாரங்களை செய்து வர, இப்பிரச்சனைகளை சமாளிக்கலாம்.

வாரம் இரண்டு முறை உங்கள் படுக்கையறையில் பாதுகாப்பான முறையில் கற்பூரம் ஏற்றி, தியானம் செய்யுங்கள். உங்கள் படுக்கையறையில் காணப்படும் எதிர்மறை ஆற்றலை விரட்ட இது உதவி செய்யும்.

வாரம் தோறும் வெள்ளி – செவ்வாய் கிழமைகளில் பூஜையறையில் நல்லெண்ணெய் விளக்கு ஏற்றி, முறையாக வழிபட்டு வர வீட்டில் நேர்மறை ஆற்றல் அதிகரிக்கும், நிம்மதியான இரவு உறக்கமும் கிடைக்கும்.

இரவு உறங்க செல்வதற்கு முன் குறைந்தது 5 நிமிடம் மூச்சுப்பயிற்சி செய்யுங்கள்.

**காரணம் 3 – புதன் கிரகத்தின் ஆற்றல் சமநிலையின்மை!**

தனி நபரின் ஜாதகத்தில் அறிவாற்றல், தொடர்பாற்றல் திறனை பிரதிபலிக்கும் ஒரு கிரகமாக புதன் பார்க்கப்படுகிறார். புதன் கிரகத்தின் ஆற்றல் சமநிலையின்மை, உங்கள் பேச்சாற்றலை பாதிக்கும், அதன் வழியே சில பல பிரச்சனைகளை கொடு வரும். இதன் தாக்கம், உங்களை நிம்மதியாக உறங்க விடாது தவிக்கும்.

இரவு உறங்க செல்வதற்கு முன், உங்கள் மனதில் இருக்கும் கோவம் – ஆதங்கத்தை, ஒரு காகிதத்தில் எழுதி பின் அழித்துவிடுங்கள். உங்கள் மனதில் இருக்கும் குழப்பங்கள் நீங்க, நிம்மதியான இரவு உறக்கம் காணலாம்.

இரவு உறங்க செல்வதற்கு முன் ‘ஓம் நமோ பகவதே வாசுதேவாய’ எனும் மந்திரத்தை உச்சரித்து, அதன் பின் உறங்க செல்லுங்கள். இதனுடன் ஒரு 5 நிமிடத்திற்கு சுவாச பயிற்சி மேற்கொள்வதும் நேர்மறையான பலன்களை உங்கள் வாழ்க்கையில் கொண்டு வரும்.

**காரணம் 4 – வாஸ்து தவறுகள்!**

பஞ்ச பூதங்களை ஒருங்கிணைத்து, நடைமுறை வாழ்க்கையில் காணப்படும் பிரச்சனைகளை தீர்க்கும் ஒரு கணிப்பு முறையாக வாஸ்து பார்க்கப்படும் நிலையில், வாஸ்து குறிப்புகளை பின்பற்றுவதில் நாம் செய்யும் சிறு தவறுகளும், நிம்மதியான இரவு உறக்கத்தை பாதிக்கலாம்.

தெற்கு பக்கம் தலை வைத்து படுப்பது, உங்கள் இரவு உறக்கத்தை பாதிக்கும்.

படுக்கையறையில் கண்ணாடி வைப்பதும் உங்கள் இரவு உறக்கத்தை பாதிக்கும். குறிப்பாக, படுக்கையறையில் உடைந்த கண்ணாடி வைத்திருப்பது கூடாது.

படுக்கைக்கு அருகில் ஒரு கோப்பையில் நீர் வைத்து பின் உறங்க செல்லுங்கள். அறையின் எதிர்மறை ஆற்றலை போக்க இது உதவி செய்யும்.

அறையில் அடர் நிறங்கள் பயன்படுத்துவது கூடாது, வெள்ளை – வெளிர் நீலம் போன்ற தன்மையான நிறங்களை பயன்படுத்துவது நல்லது!

**பொறுப்புத் துறப்பு:** பொதுவான ஜோதிட – வாஸ்து கணிப்புகள், மரபு வழி நம்பிக்கைகளின் அடிப்படையில் இந்த தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட தகவல்கள் அல்ல. உங்கள் தூக்கமின்மை



நலம் நலமறிய..!

மருத்துவ குறிப்புகள்

# இந்த 5 அறிகுறிகள் இருந்தால் உஷார்! கல்லீரலில் கொழுப்பு!



கல்லீரல், உடலில் 500–க்கும் மேற்பட்ட முக்கியப் பணிகளைச் செய்கிறது. ஆனால் தற்போது இந்தியாவில் சுமார் 38% பெரியவர்கள் மதுசாரா கொழுப்பு கல்லீரல் நோயால் (NAFLD) பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்படுகிறது. இதன் அறிகுறிகள் ஆரம்பத்தில் தீவிரமாக இல்லாததால், இந்நோய் அமைதியாக அதிகரித்து வருகிறது.

எய்ம்ஸ் உள்ளிட்ட முன்னணி மருத்துவ நிறுவனங்களில் பயிற்சி பெற்ற இரைப்பைகுடல் மருத்துவ நிபுணர் டாக்டர் சௌரப் சேத்தி குறிப்பிட்டுள்ள முக்கிய அறிகுறிகள்:

**1. வயிற்றைச் சுற்றி கொழுப்பு:**

உடல் ஒல்லியாக இருந்தாலும் வயிறு மட்டும் பெரிதாக இருப்பது கவனிக்க வேண்டிய அறிகுறி. உள்ளுறுப்புகளைச் சுற்றியுள்ள கொழுப்பு இன்சுலின் எதிர்ப்புத்தன்மை மற்றும் மோசமான வளர்சிதை மாற்றத்துடன் தொடர்புடையது.

**2. தொடர்ச்சியான உடல் சோர்வு:**

போதிய ஓய்வுக்குப் பிறகும் சோர்வு நீடித்தால் கவனம் தேவை. கல்லீரலில் கொழுப்பு தேங்கும்போது ஊட்டச்சத்துக்களை ஆற்றலாக மாற்றும் செயல்முறை பாதிக்கப்படலாம்.

**3. வலது விலா எலும்புக்குக் கீழ் அசௌகரியம்:**

மிதமான வலி, அழுத்தம், பாரம் அல்லது வயிறு நிறைந்தது போன்ற உணர்வு கல்லீரல் வீக்கம் அல்லது அழற்சியுடன்தொடர்புடையதாக இருக்கலாம். குறிப்பாக உடல் பருமன் மற்றும் சோர்வுடன் இவ்வலி இருந்தால் மருத்துவரை அணுக வேண்டும்.

**4. இன்சுலின் எதிர்ப்புத்தன்மை:**

முடி உதிர்வு, முகப்பரு, சாப்பிட்ட பிறகும் பசி, திடீர் ஆற்றல் குறைவு, கழுத்து அல்லது அக்குளில் கருமையான திட்டுகள் போன்றவை தோன்றலாம்.

**5. குமட்டல், பசியின்மை:**

சாப்பிட்டவுடன் வயிறு நிறைந்துவிடுதல், குமட்டல் அல்லது உணவில் ஆர்வம் குறைதல் போன்றவை ஏற்படலாம். கல்லீரலின் செரிமானப் பணிகள் பாதிக்கப்படுவதால் இவை தோன்றலாம்.

**முக்கிய எச்சரிக்கை**

இந்த அறிகுறிகள் இருந்தாலே கொழுப்பு கல்லீரல் நோய் இருப்பதாக உறுதி செய்ய முடியாது. மருத்துவரை அணுகி உரிய பரிசோதனை செய்வதே அவசியம். தகவல்களை மட்டும் வைத்து சுயமாக நோயறிதல் அல்லது சிகிச்சை மேற்கொள்ளக் கூடாது.

# பிரதமர் வேட்பாளர் ராகுலா? விஜய்யா? கூட்டணியில் வெடித்தது மோதல்!



சென்னை, ஆக. 24–

தமிழகத்தில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க.வுக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. தேவை 118 ஆக இருக்க, அக்கட்சிக்கு 107 இடங்களே கிடைத்தன. இதனால், காங்கிரஸ் (5), விடுதலை சிறுத்தைகள் கட்சி (2), இந்திய கம்யூனிஸ்டு கட்சி (2), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2) ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் த.வெ.க.கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது.

தமிழகத்தில் 'மைனாரிட்டி' அரசாக த.வெ.க. இருந்து வரும் நிலையில், ஆட்சிக்கு எப்போதும் ஆபத்து வரலாம் என்ற நிலையே தொடர்கிறது. குறிப்பாக, அமைச்சரவையில் பங்குபெறாத இரு கம்யூனிஸ்டு கட்சிகளால், எப்போது வேண்டுமானாலும் த.வெ.க. அரசு ஆட்டம் காணலாம் என்ற நிலையே இருக்கிறது.

**ரசிகர் மன்ற மனநிலை**

சூழ்நிலை இவ்வாறு இருக்க, த.வெ.க. அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, ஜெகதீஸ்வரி, ஸ்ரீநாத் உள்ளிட்டோர், நாட்டின் அடுத்த பிரதமர் விஜய் என்ற அளவில் பேசிவருகின்றனர். இது கூட்டணியில் உள்ள தேசிய கட்சியான காங்கிரஸ் நிர்வாகிகளை கொதிப்படைய செய்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி., "பிரதமர் வேட்பாளர் தொடர்பாக த.வெ.க.வினர் வெளியிடும் கருத்துகள் ரசிகர் மன்ற மனநிலையிலேயே உள்ளது. 'இந்தியா' கூட்டணியில் தற்போது 23 கட்சிகள் உள்ளன. த.வெ.க.வுக்கு எம்.பி.க்கள் இல்லை. எனவே, அவர்களுக்கு எம்.பி.க்கள் கிடைத்ததும் 'இந்தியா' கூட்டணியில் இணைக்கப்படுவர். த.வெ.க.வுக்கு காங்கிரஸ் ஆதரவு அளிக்கவில்லை என்றால், மத்திய மந்திரி அமித்ஷா கதையை முடித்திருப்பார். எடப்பாடி பழனிசாமி முதல்–அமைச்சராகி இருப்பார்" என்று கூறியிருக்கிறார்.

**கூட்டணியில் மோதல்**

இதன் மூலம் காங்கிரஸ் – த.வெ.க. கூட்டணியில் மோதல் போக்கு ஆரம்பித்துவிட்டது என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. அடுத்த நாடாளுமன்ற தேர்தலுக்கு இன்னும் 3 ஆண்டுகள் இருக்கின்றன. தற்போதைய நிலையில் த.வெ.க.வுக்கு ஒரு எம்.பி. கூட கிடையாது. நிலைமை இவ்வாறு இருக்க, இப்போதே ஏன் பிரதமர் வேட்பாளர் குறித்த பேச்சு தேவையா? என்ற கேள்வி எழுகிறது.

அரசியலில் தற்போதைய நிலையில் த.வெ.க. ஒரு குழந்தை. 2½ வயதுதான் ஆகிறது. தமிழகத்தில் ஆட்சிக்கு வந்து 100 நாட்களை இப்போதுதான் கடந்திருக்கிறது. இன்னும் பயணிக்க வேண்டியது வெகுதூரம் உள்ளது. தமிழகத்திலேயே இன்னும் சரியாக கால் ஊன்றவில்லை. அப்படி இருக்கும்போது, தேசிய அரசியலை இப்போதே த.வெ.க. முன்னெடுப்பது தேவையில்லாதது என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

**3–வது முறை பிரதமராக நரேந்திரமோடி**

2014–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலின்போது, பா.ஜ.க.வுக்கு பிரதமர் வேட்பாளர் தேவையாக இருந்தது. அந்த நேரத்தில், குஜராத் மாநிலத்தை முன்னேற்றப் பாதைக்கு அழைத்து வந்த முதல்–மந்திரி நரேந்திரமோடியை நாடே அறிந்து இருந்ததால், அவர் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

தேர்தலில் பா.ஜ.க.வும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. தொடர்ந்து, 3–வது முறை பிரதமராக நரேந்திரமோடி இருந்து வருகிறார். பா.ஜ.க.வுக்கு மாற்றாக இருந்து வரும் காங்கிரஸ் கட்சியில் ராகுல்காந்தி பிரதமர் வேட்பாளராக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளார்.

**தற்போதைக்கு தேவையில்லாதது**

காங்கிரஸ் தலைமையிலான 'இந்தியா' கூட்டணியில் 23 கட்சிகள் இணைந்து செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் இருந்து த.வெ.க.வும் அந்தக் கூட்டணியில் இணைந்தால், நாடாளுமன்ற தேர்தலில் கணிசமான தொகுதிகளில் போட்டியிட முடியும்.

நாடாளுமன்ற தேர்தலில், தமிழகத்தில் த.வெ.க. அதிக இடங்களில் வெற்றி பெற்றாலும், மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான 'இந்தியா' கூட்டணி அதிக இடங்களை கைப்பற்ற வேண்டும். அவ்வாறு நடந்தால்தான், அந்தக் கூட்டணியில் பிரதமர் வேட்பாளர் குறித்த பேச்சுக்கே தேவை ஏற்படும். அதுவும், ராகுல்காந்தி ஏற்கனவே முன்னிறுத்தப்பட்டுள்ள நிலையில், விஜய்யை த.வெ.க. அமைச்சர்கள் முன்மொழிந்து வருவது தற்போதைக்கு தேவையில்லாதது.

**கடந்து செல்ல வேண்டிய தூரம் அதிகம்**

தேசிய அரசியலை த.வெ.க. இப்போதே முன்னெடுத்தால், இன்னும் கடந்து செல்ல வேண்டிய தூரம் அதிகம் உள்ளது. முதலில், தமிழகத்தில் வலுவாக கால் ஊன்ற வேண்டும். நல்லாட்சியை இங்கு கொடுத்தால் தான், த.வெ.க. புகழ் நாடு முழுவதும் பரவும்.

அடுத்தக்கட்டமாக, த.வெ.க.வை அண்டை மாநிலங்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும். கேரளம், ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா ஆகிய அண்டை மாநிலங்களில் விஜய்க்கு ரசிகர் மன்றங்கள் இருக்கின்றன. இந்த மன்றங்களை மக்கள் இயக்கமாக மாற்றி, அதில் வெற்றி பெற்றால்தான், த.வெ.க.வால் அங்கு கால் ஊன்ற முடியும். இவை எல்லாம் ஒரே நாளில் நடந்துவிடாது.


**பின்னடைவை ஏற்படுத்தும்**

எனவே, முதலில் தமிழ்நாட்டில் நடைபெற உள்ள இடைத்தேர்தலில் த.வெ.க. கவனம் செலுத்தி, மொத்தம் உள்ள 7 இடங்களில் வெற்றி பெற்றாகவேண்டும். அவ்வாறு வெற்றி பெற்றாலும், பெரும்பான்மைக்கு 4 தொகுதிகள் குறைவாகத்தான் இருக்கும்.

எனவே, தேவையில்லாமல் இப்போது தேசிய அரசியலை பேசி கூட்டணிக்குள் குதர்க்கத்தை ஏற்படுத்துவது த.வெ.க.வுக்குத்தான் பின்னடைவை ஏற்படுத்தும் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

# வேலை வாய்ப்பு

## பொறியாளர்களுக்கு 147 காலியிடங்கள்... இந்தியா முழுவதும்!




NTPC Green Energy Limited (NGEL) நிறுவனத்தில் 147 பொறியாளர் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு நிறுவனத்தில் பணிபுரிய விரும்பும் பொறியியல் பட்டதாரிகளுக்கு இது நல்ல வாய்ப்பு.

| விவரம் | தகவல் |
|---|---|
| நிறுவனம் | NTPC Green Energy Limited (NGEL) |
| அறிவிப்பு எண் | 04/26 |
| பணியிடங்கள் | 147 பொறியாளர் பணியிடங்கள் |
| பணி வகை | மத்திய அரசு வேலை |
| பணியமர்த்தல் | ஒப்பந்த அடிப்படையில் |
| பணியிடம் | இந்தியா முழுவதும் |
| விண்ணப்பம் தொடக்கம் | 18.08.2026 |
| விண்ணப்பிக்க கடைசி நாள் | 07.09.2026 |
| விண்ணப்ப முறை | ஆன்லைன் |

அதிகாரப்பூர்வ இணையதளம்:

NGEL அதிகாரப்பூர்வ இணையதளம்– https://ngel.in/

# காஷ்மீரி பண்டிட்களுக்கு மீண்டும் மிரட்டல்! முகவரிகளுடன் அச்சுறுத்தல் கடிதம்




காஷ்மீர், ஆக. 24–

காஷ்மீர் பள்ளத்தாக்கில் பணியாற்றும் காஷ்மீரி பண்டிட்களுக்கு இரண்டு வாரங்களில் இரண்டாவது அச்சுறுத்தல் கடிதம் வெளியாகியுள்ளது. இதில் சுமார் 6 பேரின் பெயர்கள் மட்டுமின்றி, வீட்டு எண், தெருப்பெயர் உள்ளிட்ட தனிப்பட்ட முகவரிகளும் இடம்பெற்றுள்ளன.

"உங்கள் ஒவ்வொரு நகர்வையும் கண்காணித்து வருகிறோம்" என மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள இந்தக் கடிதம், ULC (United Liberation Council) அமைப்பின் பெயரில் வெளியாகியுள்ளது. இது லஷ்கர்–இ–தொய்பாவின் மற்றொரு முகப்பாக இருக்கலாம் என பாதுகாப்பு அமைப்புகள் சந்தேகிக்கின்றன. கடிதத்தின் உண்மைத்தன்மை மற்றும் பின்னணியில் இருப்பவர்கள் குறித்து பாதுகாப்பு முகமைகள் தீவிர விசாரணைநடத்தி வருகின்றன. இதற்கு முன் வெளியான கடிதத்தைத் தொடர்ந்து, காஷ்மீரி பண்டிட் ஊழியர்களுக்கு பாதுகாப்பான இடங்களுக்கு மாறவும், எச்சரிக்கையுடன் இருக்கவும் ஜம்மு–காஷ்மீர் அரசு அறிவுறுத்தியிருந்தது.

# அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 10 பேர் த.வெ.க.வில் இணைய உள்ளனர் - செங்கோட்டையன்!



கோபி, ஆக. 24–

ஈரோடு மாவட்டம் கோபியில் த.வெ.க. சார்பில் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேசினார். அவர் கூறியதாவது:–

தமிழக முதல்–அமைச்சர் விஜய் சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறார். இதே இடத்தில் தேர்தலின்போது செங்கோட்டையன் நடமாட முடியுமா? என்று ஒருவர் கேட்டார். தற்போது அவர் சட்டமன்றத்தில் எனக்கு எதிர் திசையில் அமர்ந்துள்ளார். தமிழகத்தில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை என்னால் கணிக்க முடியும். அதனால்தான் த.வெ.க.வில் முதல்–அமைச்சர் விஜய் முன்பு இணைந்தேன். அப்போது என்னை பலர் இவர் இந்த கட்சியில் சேர்ந்துவிட்டாரே என பேசினார்கள். 11 முறை தேர்தலில் தோல்வி கண்டவருக்கு என்ன தெரியும்? விஜய் இருக்கும் வரை அவர்தான் தமிழகத்தில் நிரந்தர முதல்–அமைச்சர். அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் கார் கொடுப்பதாக முதல்–அமைச்சர் கூறியுள்ளார். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் எங்கள் கட்சி எம்.எல்.ஏ.க்களுக்கு கார் வேண்டாம் என கூறியுள்ளார். அரசு கொடுக்கின்ற காரில் சென்றால்தான் பொதுமக்களிடம் மதிப்பு அதிகரிக்கும். அ.தி.மு.க.வில் 47 எம்.எல்.ஏ.க்கள் தான் உள்ளனர். அதில் இன்னும் 10 பேர் எங்கள் த.வெ.க. கட்சியில் இணைய உள்ளனர். மீதி உள்ளவர்களும் இன்னும் 6 மாதங்களில் வந்து விடுவார்கள். அதன் பின்னர் அ.தி.மு.க. பூஜ்ஜியமாகிவிடும். இதை நான் சொல்லவில்லை. கட்சியில் இருப்பவர்கள் என்னிடம் கூறி வருகின்றனர். எடப்பாடி பழனிசாமி இருக்கும் வரை அ.தி.மு.க. வெற்றி பெறாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்திய தங்கம் விலை!



சென்னை, ஆக. 24–

வார தொடக்கநாளான இன்று தங்கம் விலை உயர்ந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு 80 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.15 ஆயிரத்து 30–க்கும் சவரனுக்கு 640 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 240 ரூபாய்க்கு விற்பனையாகிறது. தங்கம் தொடர்ந்து உயர்ந்து வருவது மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. கடந்த 15–ந்தேதியில் இருந்து இன்று வரை தங்கம் விலை சவரனுக்கு ரூ.6,480 உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தங்கத்தை போலவே வெள்ளியின் விலையும் உயர்ந்து வருகிறது.

அந்த வகையில், இன்று வெள்ளி கிராமுக்கு 5 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி 275 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் கடந்த 15–ந்தேதியில் இருந்து இன்று வரை வெள்ளி விலை கிராமுக்கு 20 ரூபாய் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.





இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881

சினிமா துளிகள்..!

## அரசியல் என்ட்ரி?.. ஓபனாக பேசிய ரவிமோகன்!



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் நடைபெற்ற ரசிகர் மன்ற நிர்வாகியின் திருமண நிகழ்ச்சியில் நடிகர் ரவிமோகன் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். இதனைத் தொடர்ந்து ரசிகர்கள் மற்றும் பொதுமக்களுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.

ரசிகர்களின் சில குடும்ப நிகழ்ச்சிகளில் தன்னால் கலந்து கொள்ள முடியாமல் போனதாக தெரிவித்த ரவிமோகன், இனிவரும் காலங்களில் ரசிகர் மன்ற நிர்வாகிகளின் சுப நிகழ்ச்சிகளில் கட்டாயம் பங்கேற்பேன் என உறுதியளித்தார். மேலும், செப்டம்பர் 5–ம் தேதி நடைபெற உள்ள தனது பிறந்தநாள் விழாவில் ரசிகர்கள் தங்களது குடும்பத்தினருடன் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த ரவிமோகன், தனது நடிப்பில் வெளியான வெற்றிப்படமான 'தனி ஒருவன்' படத்தின் இரண்டாம் பாகத்திற்கான கதைப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக தெரிவித்தார். மேலும், 'தனி ஒருவன் 2' படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

அரசியல் குறித்த கேள்விக்கும் ரவிமோகன் பதிலளித்தார். "நல்லது செய்ய வேண்டும் என்றால் எங்கிருந்தும், எப்படி வேண்டுமானாலும் செய்யலாம். அரசியலுக்கு வந்துதான் நல்லது செய்ய வேண்டும் என்பது இல்லை. நல்லது செய்ய விரும்புபவர்கள் அரசியலுக்கு வந்து கொண்டே இருக்கிறார்கள்" என்று அவர் தெரிவித்தார். இதன் மூலம் ரசிகர்களுடனான சந்திப்பு, 'தனி ஒருவன் 2' படத்தின் அப்டேட் மற்றும் அரசியல் குறித்த தனது கருத்து என பல்வேறு விஷயங்களை ரவிமோகன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

# 10 ஆண்டுகள் நிறைவடையும் முன் முழு PF பணத்தையும் எடுத்தால் ஓய்வூதியம் வராது - செக் வைத்த EPFO!




புதுடெல்லி, ஆக. 24–

ஓய்வுக்குப் பிறகு மாதாந்திர ஓய்வூதியம் பெற தகுதி பெற வேண்டும் என்றால், ஊழியர்கள் கட்டாயமாக 10 ஆண்டுகள் வரை PF நிதியில் பங்களிப்பு செய்திருக்க வேண்டும் என்றும் இடையில் முழு பணத்தை எடுக்க கூடாது என்றும் தொழிலாளர் வைப்பு நிதி அமைப்பு (EPFO) அறிவுறுத்தியுள்ளது.

தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படும் குறிப்பிட்ட தொகை, அவர்களின் எதிர்கால தேவைக்காக தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதியில் சேமிக்கப்படுகிறது. அதற்கு ஆண்டுதோறும் வட்டி வழங்கப்படுகிறது. இந்நிலையில் 10 ஆண்டுகள் நிறைவடையும் முன்பே வைப்புநிதி பணத்தை முழுமையாக எடுப்பது, ஊழியரின் மொத்த பணிக்காலத்தின் தொடர்ச்சியை பாதிக்கும். இதனால் இடைவெளி ஏற்பட்டு, 10 ஆண்டுகள் கணக்கில் வராமல் போகலாம்.

இறுதியில் ஓய்வுக்குப் பின் மாதாந்திர ஓய்வூதியம் பெறும் தகுதியை உறுப்பினர்கள் இழக்க நேரிடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே அவசர தேவைகளுக்காக PF நிதியை எடுப்பதற்கு முன், அது எதிர்கால ஓய்வூதியத் தகுதியைப் பாதிக்குமா என்பதை உணர்ந்து உறுப்பினர்கள் முடிவெடுக்க வேண்டும்.

தங்களின் EPF கணக்கு பதிவுகள் மற்றும் Service recordஐ அவ்வப்போது சரிபார்த்துகொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதி அமைப்பின் உயரிய அமைப்பான மத்திய அறங்காவலர்கள் வாரியம், ஆண்டுதோறும் வட்டி விகிதத்தை முடிவு செய்கிறது.

2025–2026 நிதியாண்டுக்கு 8.25 சதவீத வட்டிவிகிதம் வழங்க மத்திய நிதி அமைச்சகம் ஒப்புதல் இந்த மாதம் அளித்தது.

இதையடுத்து, மத்திய தொழிலாளர் அமைச்சகத்தின் உத்தரவுப்படி, 7 கோடிக்கு மேற்பட்ட தொழிலாளர் வருங்கால வைப்புநிதி சந்தாதாரர்களின் கணக்குகளுக்கு 8.25 சதவீத வட்டி விகிதம் இம்மாதம் வரவு வைக்கப்படும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்மூலம், தொழிலாளர் வருங்கால வைப்புநிதிக்கு 2023–2024 நிதியாண்டில் இருந்து தொடர்ந்து 3–வது ஆண்டாக 8.25 சதவீத வட்டி வழங்கப்படுகிறது.




திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் அறிவுறுத்தலின்படி மண்டலம்–3, வார்டு–50, காங்கேயம்பாளையம் புதூர் பகுதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாநகராட்சி சார்பாக திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 தொடர்பாக குப்பைகளை பிரித்து கொடுப்பது, குப்பைகளை பிரித்துக் கொடுப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் டெங்கு காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்துவது குறித்தும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் துப்புரவு அலுவலர் ராமகிருஷ்ணன், துப்புரவு ஆய்வாளர்கள் முகமது ஜுபைர், செல்வி சோபனா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.




# இன்றைய கார்ட்டூன்

## ஒழிக்கப்பட்ட நக்சல்கள்... வளர்ச்சிப் பாதையில் சத்தீஸ்கர்!




# பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை.. பேரவைத் தலைவர் அறிவுறுத்தல்! ஏன்? எதற்கு?



சென்னை, ஆக. 24–

பேரவையில் விதி எண் 55, 56ன் கீழ் அறிவிப்புகள் அனுமதிக்கப்படுவதற்கு முன் சமூக வலைத்தளங்கள், ஊடகங்களில் வெளியிட அனுமதிக்க முடியாது என்று பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

தமிழக சட்டப்பேரவையில் அவைத்தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் பேசுகையில், பேரவைக்கு ஒரு அறிவிப்பை வெளியிட நான் விரும்புகிறேன். சட்டப்பேரவை விதி எண் 55, 56 போன்ற அறிவிப்புகள் பேரவையின் செயலர் அல்லது பேரவைத் தலைவர் அனுமதித்து பிறகு விவாதிக்கலாம்.

ஆனால், சில உறுப்பினர்கள் பெயரை இங்கு நான் குறிப்பிட விரும்பவில்லை. அறிவிப்புகளை எழுதி உடனடியாக யூடியூப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் மற்றும் ஊடகங்களுக்குக் கொடுப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

பேரவை உறுப்பினர்கள் தங்களது தனிப்பட்ட பெயரில் உள்ள சமூக வலைத்தளத்தில் அவற்றை வெளியிடுகிறார்கள். பேரவைத் தலைவரை அனுமதிக்கப்படும் வரை அவற்றை வெளியிடுவது விதிகளுக்கு முரணானது. அது குறித்து பேரவை விதி எண் 36 உள்பிரிவு 5 தெளிவாகக் குறிப்பிடுகிறது.

அதன்படி, பேரவைத் தலைவர் அனுமதித்து உறுப்பினர்களுக்கு அனுப்பாத வரை அதனை உறுப்பினரோ, வேறு யாரும் வெளியிடக் கூடாது. எனவே இன்று முதல் தொலைக்காட்சி, ஊடகங்கள் உள்பட அனைத்துக்கும் சேர்த்தே சொல்கிறேன், அவ்வாறு இதில் பேரவை உறுப்பினர்கள் யாராவது இதுபோன்ற அறிவிப்புகளை வெளியிட்டால் பிரசுரிக்கவும் கூடாது, வெளியிடவும் கூடாது.

எனவே அனைவரும் பேரவை விதிக்கு உள்பட்டு நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று அறிவுறுத்தியிருக்கிறார்.

# பாஜகவில் அதிகரிக்கும் எதிர்பார்ப்புகள்!



சென்னை, ஆக. 24–

பாஜகவில் தேசியத் தலைமையில் தொடங்கி, தேசிய நிர்வாகிகள், பல்வேறு மாநிலங்களின் தலைமை என அடுத்தடுத்து அமைப்பு ரீதியான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அதன் அடுத்தகட்டமாக தமிழக பாஜக தலைமையிலும் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அக்கட்சி வட்டாரங்களில் பேச்சு எழுந்துள்ளது.

தேசிய அளவில் மறுசீரமைப்பு: பாஜக தேசியத் தலைவராக இருந்த ஜெ.பி. நட்டாவின் பதவிக் காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, கடந்த ஜனவரியில் நிதின் நபின் கட்சியின் புதிய தேசியத் தலைவராகப் பொறுப்பேற்றார். இதையடுத்து, அவரது தலைமையின் கீழ், கட்சியின் தேசிய அளவிலான அமைப்பை மறுசீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, கடந்த ஆக. 17–ஆம் தேதி புதிய தேசிய நிர்வாகிகள் குழுவை நிதின் நபின் அறிவித்தார். மொத்தம் 65 பேர் கொண்ட இந்தக் குழுவில் 51 பேர் புதியவர்கள். முன்னாள் மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி, ராம் மாதவ், பியூஷ் கோயல் உள்ளிட்டோர் தேசியப் பொறுப்புகளில் நியமிக்கப்பட்டனர். இதேபோல, தில்லி, ஹரியாணா, பஞ்சாப், திரிபுரா உள்ளிட்ட மாநிலங்களிலும் புதிய மாநிலத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தேசியத் தலைமை மாற்றத்தைத் தொடர்ந்து மாநில அளவிலும் புதிய தலைமை உருவாக்கப்படுவது, கட்சியின் அமைப்பை விரிவாக மறுசீரமைக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகப் பார்க்கப்படுகிறது.

**தமிழகத்திலும் மாற்றத்துக்கான வாய்ப்பு:**

இந்தப் பின்னணியில், தமிழக பாஜக அமைப்பிலும் அடுத்தகட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்படலாம் என்கிற எதிபார்ப்பு எழுந்திருக்கிறது. கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான கூட்டணி தேசிய அளவில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தபோதிலும், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பாஜகவால் ஒரு தொகுதியில்கூட வெற்றி பெற முடியவில்லை. பாஜகவும் அதிமுகவும் தனித்தனியாகப் போட்டியிட்டது இதற்கு முக்கியக் காரணமாகக் கூறப்பட்டது.

இதையடுத்து, அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமியுடன் இணக்கமான அரசியல் அணுகுமுறையை மேற்கொள்ளவும், அதிமுக–பாஜக கூட்டணியை உறுதிப்படுத்தவும் முன்னாள் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை மாற்றப்பட்டு, கடந்த ஆண்டு ஏப்ரலில் நயினார் நாகேந்திரன் தமிழக பாஜக தலைவராக நியமிக்கப்பட்டார்.

இருப்பினும், 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் எதிர்பார்த்த அளவுக்கு இந்தக் கூட்டணியால் வெற்றி பெற முடியவில்லை. மேலும், நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன், முன்னாள் ஆளுநர் தமிழிசை செளந்தரராஜன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் வெற்றி பெறாததும் கட்சிக்குப் பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

**ஜென் ஸீ வாக்குகள் – புதிய அணுகுமுறை:**

2026 தேர்தல் முடிவுகளில் இளம் தலைமுறையினரின், 'ஜென் ஸீ' தலைமுறையினரின் வாக்குகள் முக்கியத் தாக்கத்தை ஏற்படுத்தியதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது. இதனால், தங்களது அமைப்பு மற்றும் தேர்தல் செயல்பாடுகளில் மாற்றங்களை மேற்கொள்ளும் பணியில் அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிரம் காட்டி வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, தமிழக பாஜகவும் இளம் தலைமுறையினரின் எதிர்பார்ப்புகளைக் கருத்தில்கொண்டு புதிய அணுகுமுறையை உருவாக்குவது குறித்து ஆலோசித்து வருவதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**பரிசீலிக்கப்படும் பெயர்கள்:**

தமிழக பாஜக தலைமையில் மாற்றம் செய்வது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டால், முன்னாள் ஆளுநரும் தமிழக பாஜக தலைவராக இருந்தவருமான தமிழிசை செளந்தரராஜன், முன்னாள் எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன், மாநிலப் பொதுச் செயலர் ராம. சீனிவாசன் உள்ளிட்டோரின் பெயர்கள் பரிசீலிக்கப்படலாம் எனக் கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன.

நயினார் நாகேந்திரனும், வானதி சீனிவாசனும் கடந்த ஆக. 21–ஆம் தேதி தனித்தனியாக தில்லி பயணம் மேற்கொண்டது கட்சிக்குள் நிலவி வரும் எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது. இருவரது தில்லி பயணமும் தமிழக பாஜகவின் அடுத்தகட்ட அமைப்பு மாற்றத்துடன் தொடர்புடையதா என்பது குறித்து அதிகாரபூர்வ தகவல் எதுவும் வெளியாகவில்லை. இருப்பினும், இந்தப் பயணம் அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ளது.


**எதிர்பார்ப்புகள்:**

பாஜக மாநிலத் தலைவர் உள்ளிட்ட மாநிலப் பொறுப்புகள் பொதுவாக மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கும் நிலையில், நயினார் நாகேந்திரனுக்கு இன்னும் சுமார் ஒன்றரை ஆண்டுகள் பதவிக் காலம் உள்ளது. இதனால், அவரது பதவிக் காலம் முடியும் வரை, தமிழக தலைமையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்று கட்சியின் ஒரு தரப்பினர் கருதுகின்றனர்.

வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் 2029 மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள தற்போதிருந்தே கட்சியின் அமைப்பை வலுப்படுத்தும் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று ஒரு தரப்பினர் வலியுறுத்துகின்றனர். தேர்தல் பணிகளை முன்கூட்டியே தொடங்கினால் மட்டுமே தமிழகத்தில் பாஜகவின் அமைப்பு ரீதியான வளர்ச்சியை வலுப்படுத்த முடியும் என்பதால், தலைமையில் மாற்றம் ஏற்பட்டால் அது கட்சிக்கு சாதகமாக அமையும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

தேசியத் தலைமையில் தொடங்கியுள்ள மறுசீரமைப்பு தமிழகத்திலும் எதிரொலிக்குமா, தற்போதைய தலைமையே தொடருமா அல்லது புதிய தலைமையின் கீழ் தமிழக பாஜக களமிறங்குமா என்ற கேள்விகள் அக்கட்சியினரிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

# ஐகோர்ட், மாவட்ட கோர்ட்டுகளில் மத்திய அரசு வக்கீல்களை நியமிக்க புதிய வழிகாட்டுதல் வெளியீடு!



புதுடெல்லி, ஆக. 24–

சுப்ரீம் கோர்ட், ஐகோர்ட், மாவட்ட கோர்ட்டுகளில் மத்திய அரசு சார்பில் ஆஜராகும் வக்கீல்களை நியமனம் செய்வதற்கு மத்திய அரசின் சட்ட அமைச்சகம் புதிய வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது.

அந்த வழிகாட்டுதலில் கூறியிருப்பதாவது:– சுப்ரீம் கோர்ட்டை பொறுத்தமட்டில் மத்திய அரசு சார்பில் ஆஜராகும் வக்கீல்களின் குரூப்–ஏ பட்டியலில் இடம்பெற 5 ஆண்டுகள் சுப்ரீம் கோர்ட்டி ல் மூத்த வக்கீலாக பணியாற்றி இருக்க வேண்டும். குரூப்–பி பட்டியலுக்கு 4 ஆண்டுகளும், குரூப்–சி பட்டியலுக்கு 3 ஆண்டுகளும் பணி அனுபவம் இருக்க வேண்டும். சென்னை ஐகோர்ட் மற்றும் மதுரை ஐகோர்ட் கிளையில் நியமிக்கப்படும் மத்திய அரசின் துணை சொலிசிட்டர் ஜெனரல் பதவியை பொறுத்தமட்டில் 10 ஆண்டு அனுபவமும், மத்திய அரசின் மூத்த வக்கீலாக பணியாற்ற 5 ஆண்டுகளும், மத்திய அரசு வக்கீலாக பணியாற்ற 4 ஆண்டுகளும் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மாவட்ட கோர்ட் மற்றும் சார்பு நீதிமன்றங்களில் மத்திய அரசு வக்கீலாக நியமிக்கப்படுபவர்களுக்கு 5 ஆண்டுகளும், கூடுதல் மத்திய அரசு வக்கீலாக நியமிக்கப்படுபவர்களுக்கு 3 ஆண்டுகளும் வக்கீலாக பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும். இவர்களுக்கு ஒதுக்கப்படும் வழக்குகளை அரசின் முன் அனுமதியின்றி மற்றவர்களுக்கு மாற்றக்கூடாது. ஆவணங்களின் ரகசியத்தன்மையை பாதுகாக்க வேண்டும். வழக்கு ஒதுக்கீடு என்பது சட்ட அமைச்சகத்தின் முடிவுக்கு உட்பட்டது. பதவியில் இருந்து விலக விரும்பினால் ஒரு மாதத்திற்கு முன் நோட்டீஸ் வழங்க வேண்டும். அரசின் அறிவுறுத்தல்களை மீறினால் பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஓணம் பண்டிகை: சபரிமலை கோயிலில் நடை திறப்பு!

திருவனந்தபுரம், ஆக. 24–

ஓணம் பண்டிகையை முன்னிட்டு சபரிமலை ஐயப்பன் கோயில் நடை இன்று திறக்கப்படுகிறது. மாலை 5 மணிக்கு கோயில் தந்திரி கண்டரரு பிரம்மதத்தன் முன்னிலையில் மேல்சாந்தி பிரசாத் நம்பூதிரி நடையை திறந்து தீபம் ஏற்றுகிறார். தொடர்ந்து பதினெட்டாம் படிக்குக் கீழே உள்ள ஆழியில் தீ மூட்டப்படும். உத்திராட நாளான நாளை(செவ்வாய்க்கிழமை) காலை 5 மணி முதல் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம் ஆகிய நாட்களில் கோயிலில் சிறப்பு பூஜைகள் நடைபெறும். பின்னர் ஓணம் பண்டிகை நாளான ஆக. 26ஆம் தேதி தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் ஓண விருந்து அளிக்கப்பட உள்ளது. ஓணம் பூஜைகள் நிறைவுற்று ஆகஸ்ட் 28–ஆம் தேதி இரவு 10 மணிக்குக் கோயில் நடை அடைக்கப்படும்.

ஓணம் பண்டிகைக் காலகூட்ட நெரிசலைக் கருத்தில் கொண்டு பக்தர்களுக்காகச் சன்னிதானத்தில் சிறப்பு வசதிகளை தேவஸ்வம் போர்டு செய்துள்ளது.



தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் காலாங்கரை கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நடைபெற்ற சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் 2026–2027 மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன் துவக்கி வைத்தார்.

# இந்த வாரம் வானில் நிகழும் அதிசய சந்திர கிரகணம்...!



வரும் ஆகஸ்ட் 28 ஆம் தேதி (வெள்ளிக்கிழமை), ரக்ஷா பந்தன் பண்டிகை தினத்தன்று ஓர் அரிய பகுதியளவு சந்திர கிரகணம் நிகழவுள்ளது.

இந்நிகழ்வில் நிலவின் பெரும் பகுதி மறைக்கப்பட்டு, கிட்டத்தட்ட முழு சந்திரகிரகணம் போலக் காட்சியளிக்கும். எனினும் இந்த நிகழ்வை இந்தியாவில் காண முடியாது. சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வரும்போது, பூமியின் நிழல் சந்திரனை மறைக்கிறது. அப்போது சூரிய ஒளி பூமியின் வளிமண்டலத்தைக் கடந்து சந்திரனின் மீது படுகிறது.

இதனால் சந்திரன் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கிறது. எனவே இதை ரத்த நிலவு (Blood Moon) என்கின்றனர்.

சாதாரண பகுதி சந்திரகிரகணங்களில் நிலவின் ஒரு சிறிய பகுதி மட்டுமே பூமியின் நிழலால் மூடி மறைக்கப்படும்.

ஆனால், வெள்ளிக்கிழமை நடக்க உள்ள இந்த கிரகணத்தின் போது நிலவின் மேற்பரப்பில் 96 சதவீத பகுதி பூமியின் நிழலால் மூடப்படுகிறது. வெறும் 4% மட்டுமே விளிம்பில் வெளிச்சமாக இருக்கும்.

வழக்கமாக முழு சந்திரகிரகணத்தின் போது மட்டுமே நிலவு 'பிளட் மூன்' எனப்படும் சிவப்பு நிறத்தில் பிரகாசிக்கும். ஆனால், இந்த கிரகணத்தில் 96% நிலவு மறைக்கப்படுவதால், இது பகுதி கிரகணமாக இருந்தாலும் முழு சந்திரகிரகணத்தை போலவே ரத்தச் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும் என்பதால் இது சிறப்பு வாய்ந்தது.

வட மற்றும் தென் அமெரிக்கக் கண்டங்களில் இந்த கிரகணம் மிகவும் தெளிவாகப் புலப்படும்.

சுமார் 100 கோடி மக்கள் இதனை நேரடியாக காண வாய்ப்புள்ளதாக வானியல் வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

ஐரோப்பா, ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவின் சில பகுதிகளில் இது பகுதி அளவாகத் தெரியும்.

இந்தியா, ஆஸ்திரேலியா, அண்டார்டிகா மற்றும் பசிபிக் பெருங்கடல் நாடுகளில் இந்த கிரகணம் தெரியாது.

இந்திய நேரப்படி ஆகஸ்ட் 28 காலையில் இந்த கிரகணம் நிகழ்கிறது. காலை 8:04 மணிக்கு தொடங்கி, உச்சக்கட்டம் காலை 9:43 மணிக்கு உச்சகட்டத்தை எட்டி காலை 11:22 மணிக்கு முடிவடையும்.

இந்தியாவில் இக்காலகட்டத்தில் பகல் நேரமாக இருப்பதால், இந்த கிரகணத்தை நம்மால் பார்க்க முடியாது.

## அதிர்ச்சி! மக்கள் நலனுக்கு பெரும் அச்சுறுத்தல்!

# 32 மாவட்ட நுகர்வோர் கோர்ட்டுகள் 14 ஆக குறைப்பு:

### தமிழக அரசின் முடிவுக்கு வக்கீல்கள் கடும் எதிர்ப்பு!

**சென்னை, ஆக.24:**

தமிழகத்தில் உள்ள 32 மாவட்ட நுகர்வோர் கோர்ட்டுகளை 14 ஆகக் குறைக்க தமிழக அரசு முடிவு செய்திருப்பதற்கு வக்கீல்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.



### நுகர்வோர் கோர்ட்டுகள்

- ஆயிரத்துக்கும் குறைவான வழக்குகள் நிலுவையில் உள்ள மாவட்ட நுகர்வோர் கோர்ட்டுகளை தேவைக்கேற்ப கலைக்கவோ அல்லது வேறொரு மாவட்ட நுகர்வோர் கோர்ட்டுடன் இணைக்கவோ மாநில அரசுகளுக்கு சுப்ரீம் கோர்ட்டு அனுமதி வழங்கியது.
- நுகர்வோர் கோர்ட்டுகளை பராமரிப்பதற்கான நிதிச்சுமையைத் தவிர்க்கும் வகையில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள சுப்ரீம் கோர்ட்டு அறிவுறுத்தியது.

### சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு!

- சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் பேரில், தமிழகத்தில் உள்ள நுகர்வோர் கோர்ட்டுகளையும் குறைக்க கடந்த பிப்ரவரி மாதம் தமிழக அரசு முடிவு செய்தது.
- தற்போது அதுதொடர்பான அறிக்கை தமிழக அரசின் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

### வக்கீல்கள் எதிர்ப்பு

- தமிழக அரசின் இந்த முடிவுக்கு வக்கீல்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.
- இதுகுறித்து மதுரையைச் சேர்ந்த மூத்த வக்கீல் ஒருவர் கூறுகையில், **"தமிழகத்தில் நுகர்வோர் கோர்ட்டுகளின் எண்ணிக்கையை குறைப்பது வக்கீல்களையும், நுகர்வோர்களையம் கடுமையாக பாதிக்கும் செயலாகும்"** என்று தெரிவித்துள்ளனர்.
- நிதிச்சுமை, சொந்த கட்டிடம் இல்லாததை காரணமாகக் கூறி இத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளாதத அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதது.
- ஆனால், இந்த நடவடிக்கையால் வழக்கு தொடரும் நுகர்வோருக்கும், வக்கீல்களுக்கும் வீண் அலைச்சலும், கூடுதல் செலவுகளும் ஏற்படும் என்று வக்கீல்கள் தெரிவித்துள்ளனர்.
- **எனவே, தமிழக அரசு இந்த முடிவை கைவிட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

### 14 ஆக குறைக்கப்படுகின்றன

அதன்படி, தமிழகத்தில் உள்ள 32 மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்கள் 14 ஆக குறைக்கப்படுகின்றன.

அதாவது,

- திருப்பூர், நீலகிரி மாவட்ட நுகர்வோர் கோர்ட்டுகள் – **ஈரோட்டில் உள்ள கோர்ட்டுடன் இணைக்கப்படுகின்றன.**
- வேலூர் மாவட்ட வழக்குகள் – **கிருஷ்ணகிரியிலும்**
- சேலம் மாவட்ட வழக்குகள் – **நாமக்கல்லிலும்**
- சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்ட வழக்குகள் – **ஸ்ரீவில்லிபுத்தூரிலும்**
- புதுக்கோட்டை மாவட்ட வழக்குகள் – **தஞ்சாவூரிலும்**
- கரூர் மாவட்ட வழக்குகள் – **திருச்சியிலும்**
- கன்னியாகுமரி மாவட்ட வழக்குகள் – **நெல்லையிலும்**
- விழுப்புரம், கடலூர் மாவட்ட வழக்குகள் – **திருவண்ணாமலையிலும்**
- திண்டுக்கல், தேனி மாவட்ட வழக்குகள் – **மதுரையிலும்**
- பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம் மாவட்ட வழக்குகள் – **திருவாரூரிலும்** விசாரிக்கப்பட உள்ளன.




**முக்கியமாக, மாவட்ட நுகர்வோர் கோர்ட்டுகள் குறைக்கப்படுவதால் வழக்குகள் விசாரிக்க பொதுமக்கள் வேறு மாவட்டங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்பதும், இதனால் அவர்களுக்கு கூடுதல் பயணச் செலவு மற்றும் அலைச்சல் ஏற்படும் என்பதும் வக்கீல்களின் முக்கிய எதிர்ப்பாக உள்ளது.**

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020